1981 பிப்ரவரி 26]

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, நாகர்கோவிலிலே அமைந்துள்ள அரசு நெசவுப் பள்ளி தொழிற் பயிற்சி அளிக்கின்ற ஓர் பள்ளியாக நெசவுத் தொழில் பயிற்றுவிக்கின்ற ஓர் இடமாக இருக்கிறது. அதில் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் கணக்கு கொடுக்கப்பட்டது. அதை ஓர் உற்பத்தி மையமாக ஆக்கி, அதிலே பயிற்சி பெற்றவர்கள் அங்கே இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் அப்பரண்டீஸ் ஆகப் பணி செய்ய வேண்டும். அந்தப் பள்ளியே உற்பத்தி செய்கின்ற அளவுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி, அங்கு உற்பத்தி செய்வதன் மூலம் லாபத்தைத் தேடிக்கொள்ளும் வகையில் இருக்க வேண்டும். அதற்கென்று அந்தப் பகுதி மக்களிடமிருந்து வேண்டுகோள் வந்திருக்கின்றது. அதை அரசு பரிசீலனை செய்ததா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தமிழகத்தைப் பொறுத்தவரையில், கைத்தறி நெசவு ஒரு முக்கியமான தொழில். ஆகவே நெசவுத் தொழில் நுட்பம் தெரிந்த தொழிலாளர்கள் அரசுக்கு, கைத்தறித் துறைக்குத் தேவைப் படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று, அத்தகைய கருத்தை அடிப்படையாகக் கொண்டு இம்மாதிரி யாற்றுவதற்கு வேண்டிய தேவை இப்போதுள்ளதால், இந்த நிலையத்தைக் கைத்தறி நெசவுத் தொழில் பயிற்சி நிலையமாக மாற்றலாம் என்பதை இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

தாழ்த்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு.

@ 50 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வி நிலையங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் தாழ்த்தப்பட்டோருக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 18 விழுக்காட்டை உயர்த்தும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது இருந்து உயர்த்தப்படும் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) & (இ) இதுபற்றிய குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 11-00)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பிற்படுத்தப்பட்டோருக்குக் கல்வி நிலையங்களிலும் வேலை வாய்ப்புகளிலும் 31 சதவிகிதம் என்று ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தச் சலுகை 9,000 ரூபாய் வரை ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்குத் தான் என்று சொன்னபோது, அதை நீக்க வேண்டுமென்றுதான் எல்லோரும்

@ 29–1–1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.

கேட்டார்கள். இருந்தாலும், அரசே 31 சதவிகிதம் என்பதை 51 சதவிகிதமாக மாற்றியது. அதே போன்று தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம் என்பதை 30 சதவிகிதமாக மாற்ற வேண்டுமென்று அப்பிரிவினர் விரும்புகிறார்கள். அது எப்போது நிறைவேற்றப்படும் ? எந்த அளவிற்கு அது ஏற்கப்படும் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான அதிக ஒதுக்கீட்டை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் மேல் நடவடிக்கை தெரிந்த பிறகு, நிச்சயமாக அரசு இது பற்றிய முடிவை விரைவிலே மேற்கொள்ளும்.

THIRU A. R. DAMODARAN : Sir, is it a fact that even this 18 per cent quota is not being filled up in various jobs and Colleges because there are not sufficient number of applicants ? If that be the case, why is it necessary to increase it from 18 per cent to a higher percentage ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு உறுப்பினராவர்கள் எடுத்துச் சொன்னது போன்ற குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை.

சட்டமன்ற இரு அவைகளின் நடவடிக்கைகளையும் கவனித்து அறிக்கை தர வேண்டுமென்று காவல் துறையைச் சேர்ந்த ஒற்றுத் துறை கண்காணிப்பாளர் வெளியிட்டுள்ள ஆணை குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. இராமமூர்த்தி அவர்களும், திரு. ம. சங்கரலிங்கம அவர்களும் ஓர் உரிமைப் பிரச்சினைக்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எந்த வகையில் உரிமைப் பிரச்சினை குறித்த விதிகளுக்குட்பட்டது என்பதைச் சுருக்கமாகச் சொல்லக் கோருகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

The Superintendent of Police Special (Branch) C.I.D. has in his order, dated 31st January 1981 issued orders to his Department that the Deputy Inspectors, Sub-Inspectors and others of his